**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 26.09.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## காளான் விதை உற்பத்தியில் திறன் சார்ந்த பயிற்சி

தற்போதைய காலநிலை மாற்றச் சூழ்நிலை, குறைந்து வரும் வேளாண் நிலப்பரப்பு மற்றும் நீர்ப்பற்றாக்குறை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளும்போது காளான் வளர்ப்பு என்பது பெண்கள் இளைஞர்களுக்கு சுயவேலைவாய்ப்பு மற்றும் வருமானம் ஈட்டுவதற்கான நிலையான தொழில்முயற்சியாகும். காளான் வளர்ப்பு விவசாயிகளுக்கு கூடுதல் வருமானத்தைப் பெற்றுத் தரும் வகையில் ஒருங்கிணைந்த பண்ணைய முறைக்கு மிகவும் பொருத்தமானதாகும். காளான் வளர்ப்பை மேற்கொள்வதன் மூலம் வைக்கோல் போன்ற வேளாண் கழிவுகளை புரதச்சத்து நிறைந்த காளான் காய்கறியாக மாற்ற முடியும். நமது நாட்டின் மொத்த காளான் உற்பத்தியில் சுமார் 81 சதவீதம் தமிழ்நாட்டில் மட்டுமே பங்களிக்கின்றது. இருப்பினும் நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்ய அதிக அளவில் காளான்களை உற்பத்தி செய்வதற்கு தரமான காளான் விதை தேவை அதிகமாக உள்ளது. இந்த இடைவெளியை நிரப்பும் வகையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் (TNAU) காளான் விதை மற்றும் காளான் உற்பத்தி தொடர்பான மூன்று நாள் திறன் சார்ந்த பயிற்சியை (23.09.2026 முதல் 25.09.2026) ஏற்பாடு செய்தது. இப்பயிற்சியில் கோயம்புத்தூர், வேலூர், சென்னை, திருவள்ளூர், தஞ்சாவூர், கரூர், சேலம், தர்மபுரி, திருப்பூர், திருவண்ணாமலை, கேரளா மற்றும் பெங்களூரிலிருந்தும் மொத்தம் 31 பேர் பங்கேற்று நேரடி செய்முறை

அனுபவத்தைப் பெற்றனர். பயிற்சியாளர்கள் ஆர்வத்துடன் ஊடகத் தயாரிப்பு, காளான்களின் விதை வளர்ப்பு, காளான் விதை உற்பத்தி, வைக்கோல் பதப்படுத்துதல் மற்றும் காளான் படுக்கை தயாரித்தலில் ஈடுபட்டனர். மேலும் தங்களது தொழில் முயற்சியை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் காளானின் மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களின் உற்பத்தி பற்றிய தேவையான உத்திகள் மற்றும் திட்டங்களை வேளாண் வணிகக் காப்பக மையம் மற்றும் அறுவடை பின் சார்ந்த மையத்தின் மூலமாக அறிந்து கொண்டனர். இப்பயிற்சியின் அம்சங்களைப் பயிற்சி நோயியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் முனைவர் கு. திரிபுவனமாலா மற்றும் உதவிப் பேராசிரியர் முனைவர் ப. மகாலட்சுமி ஆகியோர் வழங்கினர். முனைவர் மூ. சாந்தி, இயக்குநர், பயிர் பாதுகாப்பு மையம், முனைவர் க. அங்கப்பன் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் ஆகியோர் பயிற்சியாளர்களுக்கு தொடர்ந்து தேவையான ஆதரவும் வழிகாட்டுதலும் வழங்கப்படும் என உறுதியளித்தனர். திருச்சியைச் சேர்ந்த அவ்வை காளான் பண்ணை நிறுவனத்தின் தொழில்முனைவோர் திருமதி பிரியதர்ஷினி மற்றும் கோயம்புத்தூரைச் சேர்ந்த உயிர் வளம் இயற்கை காளான் நிறுவனத்தின் திருமதி ஹேமப்பிரியா ஆகியோருடன் பயிற்சியாளர்களுக்கிடையே கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. அவர்கள் தங்களது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு காளான் விதை உற்பத்தி, சிப்பிக் காளான் மற்றும் பால் காளான் உற்பத்தி மற்றும் மதிப்புக்கூட்டல் மூலம் காளான் தொழில் முயற்சியைத் தொடங்க பயிற்சியாளர்களை ஊக்கப்படுத்தினர்.

*மக்கள் தொடர்பு அலுவலர்*